4th February 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதலமைச்சர் அவர்கள், அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக நான் சொன்னதாகச் சொன்னார்கள். அவ்வாறு நான் சொல்லவில்லை. ஆனால், அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை போதுமானதாக இல்லையென்று சொன்னேன். அந்தத் தொழிலாளர்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் அறிக்கையை கொடுத்து குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்டுவதிலே முதலாளிக்குப் பொறுப்பு உண்டு. அதை அவர் செய்யத் தவறினால் அந்தப் பத்திரிகையாலயத்தை திறக்கக் கூடாது என்று உத்தரவு போடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

MR. SPEAKER: What is it that the hon. Member expects? Does he expect this House to direct anybody to pass an order under Section 144?

SRI M. KALYANASUNDARAM: This House can direct the Government.

MR. SPEAKER: How can that be done without observing due process of law?

SRI M. KALYANASUNDARAM: Section 144 is only preventive in character.

MR. SPEAKER: Yes. It is preventive. But, even if it is preventive action, it must be taken according to the procedure to be followed.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அரசாங்கம் ஊர்வலம் நடத்துவதைத் தடை செய்யவில்லையா? கூட்டங்கள் நடத்துவதை அரசாங்கம் தடை செய்யவில்லையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Perhaps, there is one solution according to the hon. Member Sri M. Kalyanasundaram. If the hon. Member's suggestion has to be given effect to, this House must pass a resolution that what has been done is wrong on the part of the proprietor of the newspaper. Then the proprietor of the newspaper could be hauled up for contempt of the House. That is the only course that could be adopted.

MR. SPEAKER: I do not think this is a matter which could be discussed here under an adjournment motion. Hence, I withhold my consent to it.

(2) ALLEGED UNREST IN VELLORE OVER LEASE OF LAND TO CHURCH OF SOUTH INDIA.

MR. SPEAKER: The hon. Members Sri K. R. Sambandam and Sri M. Kalyanasundaram have given notice of another adjournment motion to discuss the alleged unrest in Vellore. The hon. Member Sri K. R. Sambandam is not in his seat. So the hon. Member Sri M. Kalyanasundaram may explain how this matter can be considered under an adjournment motion.

[4th February 1966

திரு. மீ. கலியாணசுந்தரம்: இது வேலூர் நகரத்தில் பொது உபயோகத்திற்கு வைக்கப்பட்டிருந்த நிலம். 1857 சுதந்திரப் போராட்டத்தில் வீழ்ந்த ராணுவ வீரர்களுக்கு ஞாபகச் சின்னம் இருக்கிறது. அதையும் சேர்த்து சுமார் 4 ஏக்கர் நிலத்தை சர்ச்சுக்கு நீண்டகால வாடகைக்கு விடுவதாக மத்திய அரசாங்கம் உத்தரவிட்டு, நிலம் மாற்றிக் கொடுக்கப்பட்டு, தற்போது சர்ச்சும், சர்ச் பணியாளர்களுக்கான குடியிருப்பு இடமும் கட்டுவதற்காக தென்னிந்திய சர்ச்சைச் சேர்ந்தவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் நகரத்தில் அமைதிக் குறைவான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பொதுமக்கள் ஆட்சேபிக்கிறார்கள். பொதுமக்கள் குறை என்ன என்பதை நமது அரசாங்கம் பரிசிலனை செய்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, சர்ச் நிர்வாகஸ்தர்களேயும் கூப்பிட்டு மத அடிப்படையில் தகராறுகள் ஏற்படக்கூடாது என்று தெரிவித்து, அமைதியான முறையில் இந்தத் தகராறுகளைத் தீர்த்து வைக்க வேண்டும். கடந்த இரண்டு மூன்று வருஷகாலமாக இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கிறது. இதைப் பற்றி இந்தச் சபை என்ன கருதுகிறது என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூற வேண்டுமென்பதற்காக இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இது விஷயமாக பத்திரிகையில்தான் பார்த்தேன். கனம் அங்கத்தினர் அவர்களும் பத்திரிகையில்தான் பார்த்திருப்பார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கலெக்டர், முதலமைச்சர், டிபென்ஸ் மினிஸ்டர், பிரதமர் எல்லோருக்கும் மெமோரண்டம் அனுப்பியிருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது இந்த அரசாங்கம் என்ன செய்யக்கூடும் என்ற தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் விரும்பினால் இதைப் பற்றிய விஷயங்களைக் குறிப்பிட்டுக் கொடுத்தால் இன்றைக்குக் கிடைத்த தகவல்களை வைத்து நாளைக்கு வேண்டுமானால் விவரம் சொல்லலாம். தெரிவிக்கக் கூடும் என்று நினைக்கிறேன். இதை ஒத்தி வைப்பு பிரேரணையாக ஏற்றுக் கொள்வதற்கில்லை.

MR. SPEAKER : I do not think this is a fit subject for discussion under an adjournment motion. Hence, I withhold my consent to it.

(3) ALLEGED UNERST OVER STOPPAGE OF STIPENDS TO THE ELEMENTARY GRADE TEACHERS TRAINING SCHOOL STUDENTS.

MR. SPEAKER : The hon. Member Sri N. Rajangam has given a notice of an adjournment motion to discuss the serious situation created by the discontinuance of the usual stipends given to the students of the elementary-grade teachers' training schools and the consequent unrest among them.